Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# “பெருந்திருவாள் கல்யாணம்” தெருக்கூத்து நாடகப்பனுவலின் செல்நெறிகள்

**முனைவர் ந.விஜயசுந்தரி,**
**இணைப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, உருமு தனலெட்சுமி கல்லூரி, திருச்சிராப்பள்ளி.**
**(பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் இணைவுப்பெற்றது)**
**vsundari14@gmail.com**

15

**ஆய்வுச்சுருக்கம்**:- பாகூர் பிள்ளையார் குப்பம் சு. ச. ராஜகோபால் படையாச்சியாரால் எழுதப்பட்டு, கூடலூர் தாலுக்கா, செம்மங்குப்பம், ஆர். எஸ் .சண்முக உபாத்தியாயரால் பார்வையிடப்பட்டு, கூடலூர் தாலுக்கா, திருத்துறையூர் பேண்ட் குறத்தி கிராமம், வீரப்ப படையாச்சியார் என்பவரால் வெளியிடப்பெற்ற “பெருந்திருவாள் கல்யாணம்” என்னும் கிருஷ்ணன், பீமன் சண்டை நாடகம் மிகச்சிறப்பு வாய்ந்தது. மகாபாரதத்தில் துரியோதனாதியருக்கும், பாண்டவர்க்குமான பகை சிறப்பாக விதந்து ஓதப்பட்டுள்ளது. அப்பகையை நீட்டி வளர்த்தெடுக்கும் பாத்திரங்களும், சூழல்களும், களன்களும் மிகுதியாக இந்த நாடகத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளன.

**திறவுச்சொற்கள்**:- தெருக்கூத்து - அரங்கக்கலை - நிகழ்த்துக்கலை - செல்நெறி - பனுவல் - கொலுவீற்றிருத்தல்

**முன்னுரை**:- தமிழ்நாட்டின் பாரம்பரியமிக்க கிராமிய அரங்கக்கலை என்று போற்றப்படுவது தெருக்கூத்து. மக்களின் பண்பாடு, நாகரிகம், இசைப்புலமை, நடிப்பாற்றல், தனித்திறன்கள், ஒப்பனை ஆகிய பல திறன்களின் கொள்கலமாக அன்றைக்கு விளங்கிய ஒரே ஊடகம் தெருக்கூத்து. தொடக்கக் காலத்தில் புராண நிகழ்வுகள், ராமாயணம், மகாபாரதம் முதலிய இதிகாச நிகழ்வுகள் கதைக் கருக்களாக அமைந்தன. பின்னர் சமூக நிகழ்வுகளும், விடுதலை உணர்வைத் தூண்டும் களன்களும் நாடகத்திற்குள் இடம்பெற்றன. தமிழ்த் திரையுலகம் இன்றளவும் பயன்படுத்தும் நாடகக் கூறுகள், இசை வடிவங்கள், நாட்டுப்புறச் சாயல்கள் போன்றவை, கிராமிய மணம் கமழ, தெருக்கூத்துக் கலையிலிருந்து பின்பற்றப்பட்டவை .இத்தகைய தெருக்கூத்துக்கலையும், தெருக்கூத்து கலைஞர்களும் நலிவுற்ற நிலையில் இன்று உள்ளனர். தெருக்கூத்தாக நடிக்கப்பட்ட நாடகங்கள் பலவும் வாய்மொழியாக அமைந்திருந்தன. இதனால் சூழலுக்கு ஏற்ப நிகழ்வுகளும், உரையாடல்களும் மாறி மாறி இடம் பெற்றன. இவற்றுள் பல வழக்கு ஒழிந்தும் போயின . அச்சகங்கள் தோன்றிய பிறகு அந்தந்த கிராமங்களுக்கு அருகில் இருந்த, நகரங்களில் வாழ்ந்த பெரும்புலவர்கள் இத்தகைய தெருக்கூத்து நாடக நிகழ்த்துக் கலையை பனுவல்களாக எழுத முற்பட்டனர். செல்வந்தர்களில் சிலர், இப்பனுவல்களை நூலாக அச்சிட்டு வெளியிட்டனர் .அந்த வகையில் பாகூர் பிள்ளையார் குப்பம் சு. ச. ராஜகோபால் படையாச்சியாரால் எழுதப்பட்டு, கூடலூர் தாலுக்கா, செம்மங்குப்பம் ஆர் எஸ் சண்முக உபாத்தியாயரால் பார்வையிடப்பட்டு, கூடலூர் தாலுக்கா, திருத்துறையூர் பேண்ட் குறத்தி கிராமம் வீரப்ப படையாச்சியார் என்பவரால் வெளியிடப்பெற்ற “பெருந்திருவாள் கல்யாணம் என்னும்

கிருஷ்ணன், பீமன் சண்டை நாடகம்" மிகச்சிறப்பு வாய்ந்தது. இந்த நாடகத்தின் செல் நெறியை இனம் காண்பது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

உள்ளடக்கத் தேர்வுநெறி:- தொடக்க காலங்களில் தெருக்கூத்து, புராணக் கதைகளை மட்டும் தம் உள்ளடக்கமாகக் கொண்டிருந்தது. அன்றாட மனித தர்ம சிக்கல்களும், கதை சம்பவச் செறிவும் கொண்ட மகாபாரதத்தையே தெருக்கூத்து அதிகம் பயன்படுத்திக்கொண்டது. "பெருந்திருவாள்" என்று இந்நாடகத்தில் துரியோதனனின் மனைவியான பானுமதி குறிக்கப்படுகின்றாள். மகாபாரதத்தில் துரியோதனாதியருக்கும், பாண்டவர்க்குமான பகை சிறப்பாக விதந்து ஓதப்பட்டுள்ளது. அப்பகையை நீட்டி வளர்த்தெடுக்கும் பாத்திரங்களும், சூழல்களும், களன்களும் மிகுதியாக இந்த நாடகத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளன. துரியோதனன், தான் மணக்க விரும்பிய சுபத்திரையை (கண்ணனின் தங்கையை) அர்ஜுனன் மணந்து கொண்டான் என்பதை கேட்டு கோபம் கொண்டான். அவனது கோபத்தை தணிக்க, சுபத்திரையின் முதல் அண்ணனான பலராமனின் மகள் பானுமதியை மணமுடித்துக் கொடுக்க ஏற்பாடுகள் நடைபெற்றன. இக்களத்தை மையமாகக் கொண்டு நாடகத்தின் கரு தேர்வு செய்யப்பட்டுள்ளது. துரியோதனன் பானுமதி திருமணம் நிகழ்வு வேளையில், பாண்டவர்களும் இருந்தால்தான் சரியாக இருக்கும் என்று அவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டதாகவும், அவர்களும் திருக்கல்யாணத்திற்கு வந்ததாகவும், அப்பொழுது பாண்டவர்களுக்கும் கிருஷ்ணனுக்கும் சண்டை நடந்ததாகவும் கதை நகர்ந்து முடிவில் சிவபெருமானின் அருள், பாண்டவர்க்கு கிடைப்பதாகவும் கதை முடிகிறது. துரியோதனனுக்கு பானுமதியை மணமுடித்தல் ,துரியோதனனுக்கும் பாண்டவர்க்குமான பகையை பாரத போர் வரை வளர்த்தெடுக்கும் முயற்சி, ஈசனிடமிருந்து பாண்டவர்க்கு அருளை பெற்றுத் தருதல் என்ற நோக்கங்களைக் கொண்டதாக இந்த நாடகம் எழுதப்பட்டுள்ளது.

**கதைச்சுருக்கம்**:- துரியோதனன் தன் மாமா சகுனியிடம் பேசுவதாக கதை தொடங்குகிறது. துரியோதனன் கண்ணனின் சகோதரியான சுபத்திரையை மணம் செய்து கொள்ள விரும்பினான். அதனால் தன் சிற்றப்பாவான விதுர மகாராசனை பலராமனிடம் அனுப்பி, மணம் பேசி முடித்து வரச் சொன்னான். பலராமரும் துரியனுக்கு தன் சகோதரியை கொடுக்க விரும்பினார். ஆனால் நடந்தது வேறு. சுபத்திரை பாண்டவருள் ஒருவனான அர்ஜுனனை விரும்பினாள். கண்ணனின் சூழ்ச்சியால் அர்ஜுனனுக்கும், சுபத்திரைக்கும் திருமணம் நடைபெற்றது. இதனால் சினம் கொண்ட துரியோதனன், பலராமனை பலவாறு ஏசுகின்றான். அஞ்சி நடுகிய பலராமர், தன் மகள் பானுமதியை துரியோதனனுக்கு மணமுடித்துக் கொடுக்க முடிவு செய்து அதற்கு கிருஷ்ணனின் ஒப்புதலையும் பெறுகின்றார். இச்செய்தியை பலராமர் தன் மனைவி ரேவதியிடமும் மகள் பானுமதியிடமும் உரைக்கின்றார். தொடக்கத்தில் துரியோதனனை மணக்க தனக்கு விருப்பம் இல்லை என்று பானுமதி தெரிவிக்கின்றாள். என்றாலும் தன் தந்தை வாக்கு தந்துவிட்டார் என்பதற்காக திருமணத்திற்கு ஒப்புக்கொள்கிறாள். திருமணத்தை எவ்வாறு நடத்த வேண்டும் என்ற திட்டமிடல் விவாதம் நடந்து, கௌரவர்களின் தலைவனும் சகுனியும் அஸ்தினாபுரம் செல்கின்றனர். திருமண விழாவிற்கான ஏற்பாடுகள் கோலாகலமாக நடைபெறுகின்றன. பலராமர், கிருஷ்ணர், ரேவதி, ருக்மணி, ஆகியோர் பானுமதியை அழைத்துக்கொண்டு அஸ்தினாபுரம் செல்கின்றனர். அவர்களை பீஷ்மர், துரோணர், அஸ்வத்தாமன், விதுரன், கர்ணன் ஆகிய அனைவரும் வரவேற்கின்றனர். இத்திருமணத்திற்கு

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

பாண்டவர்களை அழைத்து அவமானப்படுத்த வேண்டும் என்று துரியோதனன் எண்ணுகின்றான். அதற்காக அவர்களுக்கு தூது அனுப்ப முடிவு செய்கிறான். கிருஷ்ணனே தூதுவன் வேடத்தில் செல்கிறான். பாண்டவரிடம் மண ஓலை தருகின்றான். பாண்டவர்களை துரியோதனன் அவதூறாக பேசிய செய்தியை எடுத்துரைக்கின்றான். கோபம் கொண்ட பீமன், தூதுவனாக வந்த கிருஷ்ணனுடன் சண்டையிடுகின்றான். துரியோதனனை கொல்வேன் என்று பீமன் புறப்படுகின்றான். அப்போது கிருஷ்ணன் தன் உண்மை உரு காட்டி அனைவருக்கும் அருளுகின்றார். பீமன் மன்னிப்பு கேட்கின்றான். பாண்டவர் அஸ்தினாபுரம் செல்கின்றனர். மணவிழா சடங்குகள் நடைபெறுகின்றன. பீமன் துரியோதனனின் சூழ்ச்சியை புரிந்து கொண்டு அவனுடன் சண்டையிடுகின்றான். கிருஷ்ணன் துரியோதனனை காப்பாற்றுவது போல நடித்து பீமனுடன் சண்டையிடுகின்றான். இதனை அறிந்த நாரதர் கைலாயம் சென்று, சிவபெருமானிடம் நடந்தவற்றை முறையிட, சிவபெருமானும் அந்த திருமணத்திற்கு வந்து சேருகிறார். அவர்களுடைய சண்டையை நிறுத்தி பாண்டவர்களுக்கு வெற்றி உறுதி என்றும், அவர்களை எந்த சூழலிலும் காப்பாற்றுவேன் என்றும் வாக்களித்து அருளுகின்றார். இவ்வாறு நாடகம் நிறைவு பெறுகின்றது.

நாடகக் கட்டமைப்பு:- “எல்லா தெருக்கூத்து நாடகங்களும் கதை சொல்லும் முறையில் அமைந்துள்ளன. அக்கால மக்களிடம் கதை கேட்கும் பண்பு நிறைந்திருந்ததால் அந்த முறையை தெருக்கூத்திலும் பின்பற்றினர்”1. பெருந்திருவாள் கல்யாணம் என்னும் இந்நாடகம் நீண்ட கதை அமைப்பை கொண்டுள்ளது. அதிக எண்ணிக்கையில் கதை மாந்தர்கள் உள்ளனர். முதல் காட்சி துரியோதனன் சகுனி நாரதர் ஆகியோரின் உரையாடலுடன் தொடங்குகிறது. பின்னர் துரியோதனனும் பலராமரும் சந்திக்கும் காட்சியும், கிருஷ்ணனை அழைத்து உரையாடுதலும் இடம்பெற்றுள்ளது. பலராமர், அவர் மனைவி ரேவதி, உரையாடல், மகள் பானுமதியை அழைத்து வருதல், கிருஷ்ணன் அவர் மனைவி ருக்மணி உரையாடல், கிருஷ்ணன் பலராமர் முதலியோர் அஸ்தினாபுரம் செல்லுதல், துரியோதனனும் சகுனியும் தூது அனுப்ப திட்டமிடுதல், கிருஷ்ணன் மாயா தூதுவனாக செல்ல ஒப்புக் கொள்ளுதல், கிருஷ்ணன் பாண்டவர் உரையாடல், பாண்டவர் அஸ்தினாபுரம் வருதல், பீமனுக்கும் கிருஷ்ணனுக்கும் போலியாக சண்டை நடைபெறுதல், நாரதர் கைலாயம் சென்று சிவனிடம் முறையிடுதல், சிவன் அஸ்தினாபுரம் வந்து அருள் புரிதல் என்று பல காட்சி அமைப்புகள் தொடர்ந்து இடம்பெற்றுள்ளன.

ஒவ்வொரு காட்சியும் மிக விறுவிறுப்பாக நகர்ந்து செல்வது முதல் காட்சியும், அடுத்த காட்சியும் நடைபெறும் இடங்களின் தேர்வு, அக்காட்சிகளில் இடம்பெறும் உரையாடல்கள், நாடகத்தின் முடிவு ஆகியன தெருக்கூத்து நாடக வடிவமைப்பிற்கு ஏற்ப இந்த நாடகத்தில் இடம் பெற்றுள்ளன. தெருக்கூத்து நாடகங்களில் பொதுவாக நாடக வளர்ச்சி நிலையை ஐந்து கூறாகப் பிரிக்கின்ற முறை வெளிப்படையாக பின்பற்றப்படவில்லை என்றாலும் காட்சி, களம் போன்ற பிரிவுகள் அவற்றை பொருத்திப் பார்க்க இந்த நாடகத்தில் இடம் அளிக்கின்றன. தொடக்கம்:- துரியோதனன் பலராமர் கிருஷ்ணர் ஆகியோரின் உடன் பிறந்தவளான சுபத்திரையை மணம் முடிக்க விரும்பி தன் சிற்றப்பாவான விதுரனை அணுகுவதுடன் நாடகம் தொடங்குகிறது

**வளர்ச்சி:-** துரியோதனன் எண்ணம் நிறைவேறாமல் போவது பலராமன் துரியோதனனின் கோபத்தை தணிக்க தன் மகள் பானுமதியை மணமுடித்துக் கொடுக்க ஒப்புக் கொள்வது திருமணத்திற்கு பாண்டவரை அழைக்க துரியோதனன் சூழ்ச்சி திட்டம் தீட்டுவது ஆகிய நிகழ்ச்சிகள் இந்த நாடகத்தை

அடுத்தடுத்த கட்டங்களுக்கு வளர்த்தெடுத்துச் செல்கின்றன.

**திருப்புமுனை:-** துரியோதனன் கண்ணன் என்று அறியாமல் அவனை பாண்டவர்களிடம் மாயத் தூதுவனாக அனுப்புவது இந்த நாடகத்தின் உச்சபட்ச முரண் என்று குறிப்பிடலாம்.

**உச்ச நிலை:-** துரியோதனன் பாண்டவர்களை குறித்து தரம் குறைந்த கருத்துக்கள் தெரிவித்ததை மாயத் தூதுவனான கிருஷ்ணன் பாண்டவர்களிடம் உரைக்கின்றான். இதனால் வெகுண்டு எழுந்த பீமன் வந்திருப்பவன் கண்ணன் என்பதை உணராமல் அவனுடன் கடுமையாக சண்டையிடுகின்றான். இந்த சண்டைக் காட்சியே இக்கதையின் உச்சநிலையாக கருதப்படும்.

**வீழ்ச்சி:-** அஸ்தினாபுரத்திற்கு சென்று துரியோதனனை அழிப்பேன் என்று பீமன் வெகுண்டு கிளம்புகின்றான் கிருஷ்ணன் தன் உண்மை உருவத்தைக் காட்டி அவனை ஆட்கொள்கின்றான்.

முடிவு:- கைலாயத்திலிருந்து வரும் சிவபெருமான் பாண்டவர்க்கு அருள் செய்து அவர்களது வெற்றிக்கு துணை நிற்பேன் என்று வாக்கு தருகிறார். இவ்வாறு இந்த நாடகம் இன்பியலாக முடிவடைகிறது.

**மொழிநடை:-** தெருக்கூத்து நாடகங்களில் பாடல்களும் ,வசனங்களும் இணைந்து சுவையூட்டுகின்றன. ஒவ்வொரு பாத்திரத்திற்கு என்று பாட்டும் வசனமும் நுணுக்கமாக எழுதப்பட்டுள்ளன. குறிப்பாக ஒவ்வொரு பாத்திரத்தின் அறிமுகமும் பாடல்களாகவும், வசனமாகவும் அமைகின்றன இப்பாடல்கள் அக்கால செய்யுள் முறையில் அமையாமல் இயல்பான பேச்சு நடையில் அமைந்திருப்பது நோக்கத்தக்கது. துரியோதனனுக்கு தன் மகளைத் தருவதாக பலராமர் வாக்கு தருகின்றார். பின் தன் மனைவி ரேவதியை அழைக்கின்றார்.

“குங்குமத்தில் இட்டு கூர் விழியையும் தீட்டி
கங்கணக் கடகம் பூண்டு கண்ணியும் எழுந்திருந்து
நங்கை என் தாதிமார்கள் நலமுடன் கவரி வீச
சிங்கார வதன ரேவதி சிறப்புடன் வருகிறாள்”2

என்று அந்த பாடல் ரேவதியை அறிமுகப்படுத்துகிறது.

**பாத்திர அறிமுகம்**:- எல்லா தெருக்கூத்து நாடகங்களும் கதை கூற்று முறையிலேயே அமைந்தவை. நாடகமாந்தர் அறிமுகமும் அவர்களை குறித்த வருணனையும் கூறிய பின்பே கதை தொடங்கும். தெருக்கூத்தில் நடிக்கும் முக்கிய பாத்திரங்களை கூத்தரங்கிற்கு, தங்குமிடத்திலிருந்து ஊர்வலமாக வாத்திய முழக்கங்களுடன் அழைத்து வரும் மரபு காணப்படுகிறது.

“வந்தானே மத பீம சேனன்
வாகுவல்லபமுடன் மணிகளும் மின்ன
சந்திரகுலத்தில் வந்த தீரன்
சத்ராதி தங்களை வதைத்திடும் சூரன்
சிங்கத்தைப் போலவே கர்ஜித்து
சீரான கண்ணனே மனதில் அர்ச்சித்து
பொங்கமான சேதியது தன்னே
புகழுடன் காணவே வரானே முன்னே”3

என்று பீமனை அவைக்கு அழைத்து வருவது குறித்து பாடல் விளக்குகிறது. மேலும் ஒப்பனை கலை என்று கூறும் பொழுது தெருக்கூத்து கலைஞர்கள் பாத்திரங்களை வேறுபடுத்தி உணர்த்த பளிச்சென்ற வண்ணங்களில் காணப்பட்டனர். ஆண் வேடம் தரித்தோர் காலுக்கு சல்லடம் போன்ற உடை அணிந்து அதன் மேல் பாவாடை அணிந்தனர் பல வேலைகளில் ஆண்களே பெண் வேடமிட்டனர்

அவைக்கு வந்த பீமன் வருகை

"கிரி அது போல மகுடம் சிரசில் மின்ன
கிளம்பியே கர்ஜித்து கெதை கையில் ஏந்தி
கரியதனின் பலம் படைத்த மதன் தீரன்
கார்கோடன் வாசுகி நடுநடுங்க
வீரிடவே தண்டையது காலில் கொஞ்ச"4

என்று வருணிக்கப்படுகிறது.

**சான்றெண் விளக்கம்**

1. தமிழ் நாடக வளர்ச்சியில் மாற்றமும் உத்தியும், ந. விஜயசுந்தரி, பக்கம் 43
2. மேலது பக்கம் 47
3. மேலது பக்கம் 47
4. பெருந்திருவாள் கல்யாணம்

**துணைநூற்பட்டியல்**

1." தமிழ் நாடக வளர்ச்சியில் மாற்றமும் உத்தியும்" ந. விஜயசுந்தரி
உமா பதிப்பகம், மண்ணடி, சென்னை.
2. பெருந்திருவாள் கல்யாணம்
3. "தமிழ் நாடகம் ஒரு ஆய்வு", டாக்டர் ஏ. என். பெருமாள், தமிழ் பதிப்பகம்
சென்னை.